பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-2127)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 11 திங்கட்கிழமை (25-06-2001) தொலைபேசி: 3378 ஒலி: 196

## தாயகத்துடன் வேரறுந்து நிற்கும் எம் மக்களின் உறவுப்பாலம்!
### வெரித்தாஸ் சேவைக்கு "பிரபா" புகழாரம்

[வவுனியா]

சிங்களஅரசின் பொய்யான செய்திப் பரப்புரைகளுக்கு மத்தியிலும் உண்மைக்கும் நேர்மைக்கும் மதிப்பளித்து உள்ளதைஉள்ளபடி உரைத்து செய்தித் தர்மத்தை பேணிக் காத்து செயற்படும் வெரித்தாஸ் செய்தி ஊடகத்தின் தமிழ்ப்பணி போற்றுதக்குரியது.

இவ்வாறு தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வெரித்தாஸ் தமிழ்ப்பணிச் செய்தி ஊடகத்துக்குஅனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தியில் புகழாரம் சூட்டியுள்ளார்.

பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து தமிழ் ஒலிபரப்புச்சேவையை நடாத்தும் வெரித்தாஸ் வானொலி செய்தி ஊடகம்

(8-ம் பக்கம் பார்க்க)

## தவிசாளர்பதவியைஏற்க பேரியல் அஷ்ரப் மறுப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பதவி தனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது பற்றி உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதுவும் தமக்குக் கிடைக்கவில்லையென தேசிய ஐக்கியமுன்னணியின் தலைவர் திருமதிபேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார்:

முன்னதாக ஸ்ரீலங்காமுஸ்லிம்காங்கிரசின் செயற்குழு கூட்டத்தின் போதுகட்சியின் தவிசாளர் பதவியை மூன்று நாட்களுள் பேரியல்அஷ்ரப் பொறுப்பேற்க வேண்டுமென்று முஸ்லிம்காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்திருந்தார்.

அத்துடன் தனக்கு தவிசாளர்பதவி கொடுக்கப்பட்டதுபற்றி ஊடகங்கள் மூலமே தான் அறிந்து கொண்டதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிங்காங்கிரஸின் செயற்குழுகூட்டத்திற்கு தான் அழைக்கப்படவில்லையென

(8ம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.கட்சி-ரெலோ இணக்கம்-ஜே.வி.பி. குழப்பம்
# அரசைக் கவிழ்ப்பதால்
# நாட்டிற்குநன்மை ஏற்படாது

## கடற் புலிகளால் படகு அழிப்பு

[வவுனியா]

திருகோணமலை சம்பூர்க் கடற் பகுதியில்கடந்த 22ஆம் திகதி காலை கடற்படையினரின் படகு மீது விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அணி நடத்திய திடீர்த் தாக்குதலினால்ஒருபடகு முற்றாக அழிக்கப்பட்டது.

படகிலிருந்து ஆயுதங்கள் மற்றும் தொலைத் தொடர்பு கருவிகள் என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டதாக புலிகளின் குரல் வானொலி நேற்றிரவு உத்தியோக பூர்வமாக அறிவித்தது. [இ-8]

## பிரச்சார செயலர் விமல்வீரவன்சபேட்டி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதானதடையை நீக்குமாறு ரெலோ அமைப்பு ஐக்கிய தேசியக்கட்சியிடம் கோரியிருப்பது, தொடர்பாகவும் அவ்வமைப்பு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் கையொப்பமிட்டுள்ளமை தொடர்பாகவும் ஜே.வி.பி. தீவிரமாக ஆராய்ந்து வருகிறது-

இவ்வாறு ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளரும் எம்.பியுமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். இலங்கைவானொலிக்கு அளித்த பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறுதெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது-

தமிழீழக் கோட்பாட்டை விடுதலைப்புலிகள் கைவிடுவதாக பகிரங்கமாக அறிவித்

(8-ம் பக்கம் பார்க்க)

## பொ.ஜ.ஐ.முன்னணியின் மத்தியகுழு இன்று கூடும்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் மத்திய குழுக் கூட்டம் இன்று காலை கூடி தற்போது எழுந்துள்ள அரசியல் சூழ்நிலை குறித்து ஆராயவுள்ளதுடன் முஸ்லிம் காங்கிரஸ் எம்பிக்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவும் ஆராயவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் இக்கூட்டம் நடைபெறும். முக்கிய அமைச்சர்கள் இதில் கலந்து கொள்வர்.

இக்கூட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை முறியடிக்கும் உத்திகள் தொடர்பாகவும், ஜே.வி.பியின் மத்திய குழுத் தீர்மானம் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்படவுள்ளது.

இதேவேளை வெளிநாடு

(8ம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கையில்லாப் பிரேரணை தேசத் துரோகச் செயலாகும்!
### ஐ.தே. கட்சியை சாடுகிறார் பிரதமர்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் ஆட்சியைக் கவிழ்க்க, ஐக்கிய தேசியக் கட்சி மூன்று தமிழ்க்கட்சிகள் ஆதரவுடன், அரசுக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணையைசமர்ப்பித்திருப்பது. தேசத்துரோகச்செயல் என்று பிரதமர் ரட்ணஸ்ரீ விக்கிரம நாயக்கா குற்றம் சாட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி சமர்ப்பித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கண்டு அரசாங்கம் குழம்பிவிடவில்லை. அதனை எதிர்கொள்ளத் தயாராகவே உள்ளது;

"அரசைக் கவிழ்க்க ஐக்கிய தேசியக்கட்சி தீட்டிய சதியைக்கண்டு அக்கட்சியின்பின் வரிசைப் பாராளுமன்ற உறுப்பினர்களே அதிருப்தி அடைந்துள்ளனர்.

இவர்கள் அரசுக்கு ஆதரவளிக்கவும், நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்கவும், தயாராக உள்ளனரென்றும் பிரதமர் ரட்ணஸ்ரீ விக்கிரமநாயக்கா நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ)

## யாழ் வைத்தியசாலைக்கு மருந்துஎடுத்துவருவதில் நிலவியதடை நீங்கியது
### அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைக் காரணங்காட்டி யாழ் போதனாவைத்தியசாலைக்கு மருந்துப் பொருட்களைவழங்குவதில்நிலவிய தடைகள் நீக்கப்பட்டுள்ளது

பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பேச்சு நடாத்தியதையடுத்து, அவசர மருந்துகள் எடுத்துவருவதில் உள்ள தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து முக்கிய மருந்துப்பொருட்கள் உட்பட கதிர்ப் படங்களை கழுவுவதற்குரிய இரசாயனப் பொருட்களை யாழ் போதனா வைத்தியசாலைக்கு எதுவித தடைகளும் இன்றி வழங்க அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. (ந)

## ஜே.வி.பியின் முடிவுக்கு கொடித்துவக்கு பாராட்டு

(கொழும்பு)

பொதுஜனஐக்கியமுன்னணி அரசுக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பாக, ஜே.வி.பி. உறுப்பினர்கள் ஒவ்வொருவரும்தமது சுய விருப்பின்படி செயற்பட முடியுமென்று. ஜே.வி.பியின் மத்திய குழு தீர்மானித்ததை ஐக்கிய தேசியக்கட்சியின் பேச்சாளர் கருணசேன கொடித்துவக்கு பாராட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஜே.வி.பியின் சார்பில் பாராளுமன்றத்தில் இளைஞர் சமுதாயம் இருப்பதால் நல்லதொரு முடிவை ஜே.வி.பி எடுத்துள்ளதென்றும், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஜே.வி.பி உறுப்பினர்கள் எத்தனை பேர் வாக்களிக்க உள்ளனரென்பதைப் பொறுத்தே நீண்டகால அரசாங்கத்தை அமைப்பதா அல்லது குறுகிய கால அரசை அமைப்பதா என முடிவு செய்ய முடியுமென்றும் கொடித்துவக்கு மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## ரவூப்ஹக்கீமை பதவிநீக்கியமை பேரினவாதத்தின் வெளிப்பாடே
### மட்டு-அம்பாறை ஆயர் கிங்ஸ்லி சீற்றம்

(மட்டக்களப்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் கூட்டுக்கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் திடீரென தூக்கி வீசப்பட்டமையானது பேரினவாதத்தின் சுயரூபத்தையே காட்டுகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அமைச்சர் பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்டமை குறித்து கருத்து வெளியிட்ட மட்டக்களப்பு - அம்பாறை மறைமாவட்ட ஆயர்அதிவணக்கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது

பொதுஜன ஐக்கிய முன்னணி அமைச்சரவையிலிருந்து

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வியாழ மாற்ற பலாபலன்

வியாழ மாற்ற பலாபலன்களும் 08-11-2001 முதல் 4 மாதவியாழவக்கிரபலன்களும் ரூ10/- விற்பனையாகின்றன. ரூபன் புத்தகசாலை, 605, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். சனிப்பா சிரியர்- சத்யா ஆனைக்கோட்டை. [3280]


### ஷெல் வீச்சினால் மதில்கள் சேதம்

(சுண்டுக்குளி)

யாழ். குடாக்கடல் பகுதியை நோக்கி நேற்று முன்தினம் படையினரால் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத் தாக்குதல்களினால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் பாஷையூர் அருளானந்தம் ராஜா என்பவரது வீட்டு மதிலும், ஈச்சமோட்டையில் உள்ள பூரண சுவிஷேச சபையின் மதிலும்சேதத்திற்கு உள்ளாகியுள்ளன (உ-110)

### நீதிமன்றில் ஆஜர்

[மந்திகை]

கடந்த 9 ஆம் திகதி மூத்த விநாயகர் ஆலயத்தடியில் இடம் பெற்ற மினிடஸ் முச்சக்கரவண்டி விபத்துதொடர்பாக முச்சக்கர வண்டியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அண்மையில் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். [உ-23]

### சமூகக்கல்வி போட்டி

[மந்திகை]

கரவெட்டி கோட்டப்பாடசாலை மாணவர்களுக்கான கோட்டமட்ட சமூகக்கல்வி பாடப் போட்டி நாளைவதிரி திரு இருதயக் கல்லூரியில் நடைபெறுமென கோட்டக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார். (உ-23)

### வருடாந்த மஹோற்சவம்

(துன்னாலை)

கரவெட்டி மத்தி தச்சை ஐங்கரன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்கிழமை கொடியேற்றத்துடன ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 5 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவம் நடைபெறவுள்ளன. (செ-41)

### மணிவாசகர் குருபூஜை

(இணுவில்)

கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலய சைவ மன்றத்தினரால் இன்று மணிவாசகர் குருபூஜை நடத்தப்படவுள்ளது.

இந் நிகழ்வில் பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மாவின் சிறப்புச் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது. (செ-41)

## நாட்டில் அமைதிச்சூழல் ஏற்பட்டாலே

# பலாலி ஆசிரியர் கலாசாலை பழைய இடத்தில் இயங்குவது நடைமுறைச் சாத்தியமாகும்

### இராணுவ அதிகாரி காமினி ஜெயசுந்தர விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுர வீதியை விரைவில் திறந்து மக்கள் பாவனைக்கு விடுவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படுமென இராணுவ அதிகாரி காமினி ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை 512 வது இராணுவத் தலைமையலுவலகத்தில், இராணுவ அதிகாரி காமினிஜெயசுந்தர தலைமையில் அரச திணைக்கள அதிகாரிகளுடனான ஒரு சந்திப்பு இடம் பெற்றது

இச்சந்திப்பில் மேற்படி மணிக்கூட்டு வீதி நீண்ட காலமாகப் போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் மக்கள் எதிர்நோக்குகின்ற சிரமங்கள் பற்றி விரிவாக எடுத்துக்கூறப்பட்டதுடன்,

அப்பகுதியில் இயங்கும் பொலிஸ் நிலையத்தை வேறிடத்திற்கு மாற்றி அங்குள்ள கட்டடங்களைப் பயன்படுத்த அனுமதி வழங்க வேண்டும் எனவும்,

பலாலி ஆசிரிய கலாசாலையை மீண்டும் சொந்த இடத்தில் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அரச திணைக்களஅதிகாரிகளால் கோரப்பட்டது.

இவை தொடர்பாக இராணுவ அதிகாரி கருத்துக் கூறும்போது,

பலாலி ஆசிரியர் கலாசாலை அதி உயர் இராணுவப் பாதுகாப்பு வலயத்துள் இருக்கின்ற காரணத்தினால், ஆசிரியர் கலாசாலையை உரிய இடத்தில் இயங்கவைப்பது உடன் சாத்தியப்படாது எனவும் நாட்டில் அமைதிச் சூழல் ஏற்படும் போது மாத்திரமே இது நடைமுறைச் சாத்தியமாகும் எனவும் குறிப்பிட்டார்.

இச் சந்திப்பில் குடாநாட்டில் நிலவும் பல்வேறு பிரச்சினைதொடர்பாக ஆராயப்பட்டன. (உ-10)

### நிவாரண விநியோகம் இவ்வாரம் ஆரம்பம்

(மந்திகை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் பிரிவில் நிவாரணம் பெறுவோருக்கான ஆனி மாத நிவாரணப் பொருட்கள் இவ்வாரம் முதல் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாக பிரதேச செயலர் எஸ். ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்

இடம்பெயர்ந்தோர், சமுர்த்தி, மீனவ நிவாரணங்களைப் பெறுவோர் புதன் கிழமை முதல் நிவாரணச் சிட்டைகளை பெறமுடியுமென அவர் மேலும் தெரிவித்தார் (உ-23)

### திருநெல்வேலிக்கு தினமும் மாணவர் படையெடுப்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் அமைந்துள்ள வளிமண்டல ஆராய்ச்சி நிலையத்தை நோக்கி தினமும் பாடசாலை மாணவர் படையெடுத்து வருகின்றனர்.

இம்மாதம் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிலையத்தை இதுவரை 22 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பார்வையிட்டு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையத்தை பார்வையிட விரும்பும் பாடசாலைகள் வளிமண்டல ஆராய்ச்சி அவதானிப்பு நிலையம், திருநெல்வேலி என்று விலாசமிட்டு கடிதத்தை அனுப்பினால் மீள் கடிதம் கிடைக்கப் பெற்றதும் குறித்த தினத்தில் சென்று பார்வையிடலாம் என்று வளிமண்டல ஆராய்ச்சி அவதானிப்பு நிலைய தொழில் நுட்ப உத்தியோகத்தர் எஸ். பிரதீபன் தெரிவித்துள்ளார். (க-06)

### திக்கத்தில் உற்பத்தியாகும் மதுபானத்திற்கு வரிவிலக்கு

[மந்திகை]

திக்கம் வடிசாலையில் உற்பத்திசெய்யப்படும்மதுபானத்திற்கு இவ்வாண்டு வரி விலக்கப்பட்டுள்ளதாக வடிசாலை பொது முகாமையாளர் பரஞ்சோதி ரவீந்திரன் தெரிவித்தார்.

இதனால் வரும் மேலதிக வருமானத்தினைக் கொண்டு பனம் பொருள் உற்பத்தியாளர்கள் மற்றும் சீவல் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தைஉயர்த்தநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வடிசாலை ஊழியர்களின் தொழில்சார் தகைமை மேம்படுத்தப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-23)

### குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன் தினம் நஞ்சருந்திய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

குப்பிளான் பகுதியைச் சேர்ந்த நவரட்ணம் நவரஞ்சன், (வயது 21) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு மரணமடைந்தவராவார். இவரது சடலம் மரண விசாரணையின் பின் மனைவியிடம் கையளிக்கப்பட்டது. (க-10)

### கருத்தரங்கு

பளை பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் கிளைக்குழுத் தலைவர், உப தலைவர், பொருளாளர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 27 ஆம் திகதி மு. ப 10. 00 மணிக்கு கோண்டாவிலில் உள்ள தலைமைக் காரியாலயத்தில் நடைபெறுமென சங்கத்தின் பதில் தலைவர் ஆ. இராசரத்தினம் தெரிவித்தார். (உ-23)

## பரு. மின்சாரசபை பொறியியலாளர் விபத்தில் காயம்

(மந்திகை)

பருத்தித்துறை தட்டா தெருச்சந்தியில் மோட்டார் சைக்கிள்- சைக்கிள் விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்தநிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை மின்சார சபை பொறியியலாளர் துரைசாமி இராஜலிங்கம் [வயது60] பருத்தித்துறை முதலாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த குழந்தையன் புஷ்பராசா (வயது34) ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-23)

## தற்கொலை செய்ததாகக் கூறப்படும் இளைஞனின் சடலம் ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

கிரனேட் வெடிக்க வைத்து தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படும் இனந்தெரியாத இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று முன் தினம் இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்ட மேற்படி சடலம் அடையாளம் காணும் பொருட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (உ-104)

## மணல் அகழும் உழவு இயந்திர உரிமையாளர் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம்

(புலோலி)

வடமராட்சி கிழக்கில் கடற்கரைமணல் அகழும் உழவு இயந்திர உரிமையாளர்களுக்கான சங்கம்ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபை பொது நூலக மண்டபத்தில் இச்சங்க பொதுக்கூட்டம் கே. செல்வமாணிக்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இச்சங்கத்தின் போஷகர்களாக பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் வி. பி. வேலாயுதபிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக கே. எஸ். செல்வமாணிக்கமும், உப-தலைவராக கே. கந்தசாமியும், செயலாளராக ரீ. சிவலிங்கம் உப-செயலாளராக கே. சிவானந்தனும், பொருளாளராக எஸ். மணிதரனும் செயற்குழு உறுப்பினர்களாக 9 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-52)

### மேலதிக சிகிச்சை

(புலோலி)

மினிபஸ்சும் ஆட்டோவும் மோதி விபத்துக்குள்ளானதில் மினிபஸ்ஸில் பிரயாணம் செய்த பருத்தித்துறை சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் கையில் பலத்த காயங்களுக்குள்ளானார்.

இவரை மேலதிகசிகிச்சைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லுமாறு வைத்திய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

புலோலி தெற்கைச்சேர்ந்த பருத்தித்துறை பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரான செல்வி கோமதி கோபாலகிருஷ்ணன் (வயத-24) என்பவரே மேற்படி விபத்தில் காயமடைந்தவராவார். (உ-52)

### தேவாலயம் நிர்மாணிப்பு

(புலோலி)

வடமராட்சி எக்காளத்தொனி பூரண சுவிஷேச சபைக்கான தேவாலயம் சுமார் 5 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மந்திகை மடத்தடியில் நிர்மாணிக்கப்பட்ட இத் தேவாலயத்தை பாஸ்டர் மேவின் குணச்செல்வம் திறந்து வைத்தார். (உ-52)

### சனசமூக நிலையம் மாடிக்கட்டடத்தில்

வல்வெட்டித்துறை நகர சபைப்பகுதியில் உள்ள வல்வெட்டி கருணாநிதிசனசமூக நிலையத்திற்குச் சுமார் 8 இலட்சம் ரூபா செலவில் மாடிக்கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வெளி நாடுகளில் வாழும் வல்வெட்டிப்பகுதி இளைஞர்கள் இப்புதியசனசமூகநிலைய நிர்மாணத்திற்கான நிதி உதவிகளை வழங்கியுள்ளனர். (உ-52)


## வெளிவந்துவிட்டது

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த
கலாநிதி ஏ. சூசை ஆனந்தன்
அவர்கள் எழுதிய
சமுத்திரவியல் நூல்

பாடசாலை மாணவர்கள் முதல் (ஆண்டு 10, 11,) A/L, G. A. Q. பல்கலைக்கழக மாணவர்கள், மீன்பிடியியல் டிப்ளோமா மாணவர்கள் மற்றும் மீன்பிடியியல் துறைசார் ஆர்வலர்கள் அனைவரும் கற்க வேண்டிய நூல்;

நூலின் விலை: 125 ரூபா மட்டும்

கிடைக்கும் இடம்; புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்.

[3278]

## வல்வை வைத்தியசாலையில்

# புனரமைப்புபணிகளைமேற்கொள்ள

# பல வழிகளில் இருந்து நிதி உதவி

(புலோலி)

வல்வெட்டித்துறைமாவட்ட வைத்தியசாலையில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள பல தரப்பில் இருந்தும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த வகையில், பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை எம். எஸ். எவ். பருத்துவக் குழு மயக்க பருந்து நிபுணர் திருமதி குடரூன் ஆயிரம் ரூபாவையும் வைத்தியசாலையில் முப்பைத் தொட்டிகளை அமைப்பதற்கு உடுப்பிட்டி வர்த்தகர் சங்கத் தலைவர் 10 ஆயிரம் ரூபாவையும் வைத்தியசாலையின் முன்புறம் இருக்கைகளை அமைப்பதற்கு 8 ஆயிரம் ரூபா பெறுமதியான சீமெந்தைப் பருத்தித்துறை பல நோக்கு கூட்டுறவுச்சங்கமும்.

கெருடாவில் அரசினர்தமிழ் கலவன் பாடசாலை அதிபர் திருமதி சுரேந்திர நாதன் வைத்தியசாலை அபிவிருத்திக்கென 5 ஆயிரம் ரூபாவையும் அன்பளிப்பாகவழங்கியுள்ளனர்.

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவன பிரதம இணைப்பாளர் எஸ் இராஜசிங்கம்வைத்தியசாலைப் பாவனைக்கென ஆயிரம் லீற்றர் கொள்ளத்தக்க பிளாஸ்ரிக்நீர்த்தொட்டியொன்றை வழங்கவுள்ளாரென்றும் வல்வெட்டித் துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே மயிலேறும் பெருமாள் தெரிவித்துள்ளார். (உ-52)

## நிவாரண விநியோகத்தில் தரமற்ற பால்மாபொதி

(ஊர்காவற்றுறை)

யாழ் குடாநாட்டில் தற்போது இடம்பெற்றுவரும் 91 ஏ.பி நிவாரண விநியோகத்தில் 'ரத்தி' எனும் புதுவகைப் பால்மா பொதி விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இதன் பெறுமதி 120 ரூபா என சிட்டைகளில் குறிப்பிடப்படுகின்ற போதிலும் தரம் மிகக் குறைவாகவே காணப்படுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னைய நிவாரணத்திற்கு அங்கர்ப் பால்மாப் பொதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-75)

## மாமியை கத்தியால் குத்திய மருமகன்

(கொழும்பு)

மாமியாருக்கும்மருமகனுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கொலையில் முடிவடைந்த சம்பவம் கிரிந்திவலைப் பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை இடம் பெற்ற இச்சம்பவத்தில் இரு பிள்ளைகளின் தாயாரான பீ.சோமலதா (வயது48 என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

தனது நண்பர் ஒருவரை இரவில் வீட்டில் தங்குவதற்கு அனுமதிக்காததால் ஆத்திரமடைந்த மருமகன் மாமியாரைக்கத்தியால் குத்திக் கொன்றுள்ளார். (செ)

## கைதடிச் சந்தியில் குண்டு வெடிப்பு எனினும் சேதமில்லை

(சுண்டுக்குளி)

நேற்று முன்தினம் கைதடிச் சந்திக்கு அண்மையில் பிற்பகல் ஒரு மணிக்கு குண்டு ஒன்று வெடித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து அவ்விடத்தில் உள்ள பொது மக்களை படையினர் அருகில் இருந்த கந்தசுவாமி கோயிலுக்கு கூட்டிச் சென்று சோதனை செய்த பின்விடுவித்தனர்.

இக்குண்டு வெடித்ததில் பொதுமக்களுக்கு எந்தவித சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது (உ-110)

## மகனைச் சுட்டுக் கொன்ற தந்தை

[கொழும்பு]

திஸ்ஸமஹாரகம கலன்திஸ்ஸபுரத்தில் அண்மையில் தந்தையொருவர் மகனைச் சுட்டுக் கொன்றுள்ளார்.

பாலகொடல்லகே ஹேமந்த (வயது-24) என்பவரே தந்தையின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியானவராவார்.

தந்தைக்கும் மகனுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக மகன் தகப்பனைச் சுட முயன்ற போது அதனை முறியடித்த தகப்பன் மகனைச் சுட்டுக் கொன்றுள்ளார்.

இறந்தவர் கடந்த ஆண்டு தனது சகோதரனை கத்தியால் குத்தி கொலை செய்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-3)

## பெரிய கல்லாறில் சூட்டுச் சம்பவம் பொலிஸார் ஒருவர் பலி

[கொழும்பு]

மட்டக்களப்பு பெரிய கல்லாற்றுப் பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பொலிஸார் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

பெரிய கல்லாறு சித்தி விநாயகர் ஆலயத்திற்கு அருகில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பொலிஸார்மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அதற்கு இடையில் அகப்பட்ட இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு பாராட்டு

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும்முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீமை அமைச்சர் பதவியில் இருந்து திடீரென ஜனாதிபதி நீக்கியதைப் பாராட்டும் தீர்மானம் ஒன்றை அரசபாராளுமன்ற உறுப்பினர்கள் நிறைவேற்றியுள்ளனர். (உ-8)

## இராசி பலன்

25-6-2001
(ஆனி 11, திங்கள்)
சதுர்த்தி மு ப 9.29 வரை
ஆயிலியம் பி.ப 1. 25 வரை
ராகுகாலம்-7.25-8.55
நல்லநேரம்-11.55-1.25
ஸ்கந்த பஞ்சமி

**மேடம்**
மனச்சோர்வு, வியாதி, தாழ்வுநிலை, அரசாங்க நன்மை.

**இடபம்**
விரும்பாத உறவு, தன்னம்பிக்கைக்குறைவு, முயற்சி தாமதம், கல்விமேன்மை.

**மிதுனம்**
குடும்ப சுகம், தனவரவு, புதியவர் சந்திப்பு, காரிய நன்மை.

**கடகம்**
வாக்குக்கலகம். பொருள் செலவு, செல்வாக்குகுறைவு, முயற்சி தாமதம்.

**சிங்கம்**
சென்றஇடத்தில் செல்வாக்கு, நண்பர்கள் உதவி, சயன சுகம், வீண்கற்பனை.

**கன்னி**
தந்தைவழி உறவு, காரிய தாமதம், பிரயாணம், சுப செலவு.

**துலாம்**
மனமகிழ்ச்சி, பெருமையான நிகழவு, குடும்பசுகம், காரியம கைகூடும்.

**விருச்சிகம்**
தொழில் சிறப்பு, சுப நிகழ்வு. கடிதஉறவு, முயற்சி கைகூடும்.

**தனுசு**
புதிய திட்டம், உடல் சோர்வு, பிரயாணம், கட்டுப்பாடு.

**மகரம்**
காரிய தடங்கல், எதிர் பாராத பிரச்சினை, பிரயாண பயம், வியாதி.

**கும்பம்**
போசனசுகம், களஸ்திர சுகம், தனவரவு, முயற்சி ஜெயம்.

**மீனம்**
முயற்சி விருத்தி, பகைவர் விலகுவர், மனமகிழ்ச்சி, ஆரோக்கியம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## மணிபல்லவத்தில் மஹோற்சவம் 5 ஆம் நாள்

## 'நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை'

### கும்பி கொதிக்கக் கும்பிருகின்றோம்

அம்புய வதனி! சம்புவின் மனைவி!
அன்னை நாகம்மே!
ஆழியின் கரையில் வாழிடம் கொண்டெம்
ஆராதனை ஏற்பாய்
நம்பியுன் அடியில் வம்பலர் விழிநீர்
நாளும் சொரிகின்றோம்
நாயிலும் கடையர் ஆயினும் எம்மை
நல்வழி செலுத்தம்மா!

நொம்பல மாகிக் கம்பலை மிக்குன்
நுண்ணருள் வேட்கின்றோம்
நூறுடன் நூறு நாமம் உரைத்தே
நொந்துனை அழைக்கின்றோம்
கும்பி கொதிக்கக் கும்பலாய் வந்து
கும்பிடு கின்றோம்நாம்
கோகில வாணி! நாக அணிச்சீ!
கொற்றவை! உற்றருளே.

சொக்கன்

### நிம்மதி, உய்மதி தருவாள்!

அறிவும் அருளும் தருவாளை
ஆற்றலும் தேற்றலும் தருவாளை
நெறியும் நிறைவும் தருவாளை
நிம்மதி உய்மதி தருவாளை
செறியும் சிறார்களைத் தருவாளை
சீரும் திருவும் தருவாளை
பரிவும் ஊட்டமும் தருவாளை
பாங்குற நயினையிற் பணிமினே.

நயினைச் சோதி

### வேண்டுமுன் துணையிங்கு

அலைகள் சூழ் பதியினிலே
ஆழ்பவளே அம்மா - நின்
அருள் அலைகள் வேண்டுமிங்கு
''அனைத்துடனும்'' வாழ!

துயரனைத்தும் துடைப்பவளே
தூய எங்கள் துணையே - நீ
துன்பங்கள் போக்கியிங்கு
துணையிருப்பாய் தாயே!!

கோவையூர் மஞ்சு

### அலையும் காலம் அகற்று

அன்னையே! நயினையம்மா!
அன்னமே! உந்தன் சின்னமம்மா!
அன்பே! உந்தன் வண்ணமம்மா!
அழகே! உந்தன் உருவமம்மா!
அகதியாய் திரியும் நம் இளம்
அலையும் காலம் அகற்றிடுவாய்
அடாவடித் தனங்கள் போக்கிடுவாயே!
அடியவர் அவாவிநிற்கும்
அச்சய பாத்திரத்தை அளித்திடுவாயே!

கரவையூரான்

### போர் மேகம் கலைத்துவிடு

தொல்லைகளைத் துடைத்திடுவாய் நாகதாயே
சூழுந்துயர் துடைத்தெறிவாய் நாகதாயே
சுதந்திரத்தைத் தந்திடுவாய் நாகதாயே
பேரிடிகள் கேட்குதுவே நாகதாயே
போர்மேகம் கலைத்திடுவாய் நாகதாயே
நாதியற்ற நடைப்பிணமாய் நாகதாயே
நடுத்தெருவில் அலைகிறாரே நாகதாயே
ஓடி ஓடிகளைந்து விட்டார் நாகதாயே
ஓட்டாண்டி ஆகிவிட்டார் நாகதாயே

எஸ். எஸ். எஸ். கீர்த்தி

### நாகபூசணித் தாயே

ஞாலம் போற்றும் நயினை உறை
நாகபூசணித் தாயே அம்மா
சீலம் போற்ற சிறப்புடன் வாழ
சீராய் வழிகள் காட்டிடம்மா

நாடி உன்னை வருபவர்க்கு
நன்மை பல செய்திடம்மா
பாடி உன்னைப் பணிகின்றோம்
எம்மை என்றும் காத்திடம்மா

அபி
கன்னாதிட்டி

# தந்தை செல்வாவின் வாழ்க்கைச்சரிதம்
# விவரணப்படமாக வெளியிடத் தீர்மானம்

(தென்மராட்சி)
தந்தை செல்வாவின் வாழ்க்கை வரலாற்றினையும் அரசியல் சமூகப்பணிகளையும் விவரணப் படமாகவும், நூலாகவும் வெளியிடுவதற்கு தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழு தீர்மானித்துள்ளது.

மேற்படி அறங்காவல் குழுவின் கூட்டம் அண்மையில் யாழ்ப்பாணக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் அதன் தலைவர் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது.

அக்கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

தமிழ் இனத்தின் எதிர்கால சந்ததியினருக்கு தந்தை செல்வாவின் அரசியல், சமூகப் பணிகள் பற்றிய அறிவையும் தெளிவையும் ஏற்படுத்தும் பொருட்டே இவ்விரு வெளியீடுகளும் வெளியிடப்படவுள்ளன.

இதன் பிரகாரம் விவரணப் படம் தயாரிப்பது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொருட்டு பேராயர் ஜெபநேசன் தலைமையிலான குழுவொன்று விரைவில் தென்பகுதி சென்று திரைப்பட இயக்குநர்களைச் சந்திக்கவுள்ளது.

அதேபோல, நூல்வெளியீடு தொடர்பான பணிகளை யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவரும் குழுவின் செயலாளருமான பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் முன்னெடுத்து வருகின்றார். (உ-77)

## குருபூஜை

(யாழ்ப்பாணம்)
ஸ்ரீ வடிவேல் சுவாமிகளின் மகாசமாதிக் குருபூஜை இன்று உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் நடைபெறவுள்ளது. (செ)

## புனரமைப்பு

(இணுவில்)
உடுவில் கிழக்குப் பகுதியில் பொதுமக்கள் பாவனைக்கு உரிய பொதுக்கிணறுகள், பட்டினிக்கு எதிரான நிறுவனத்தால் புனரமைக்கப்பட்டு வருகின்றன. (செ-49)

## அலங்கார உற்சவம்

[யாழ்ப்பாணம்]
மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த காம்யோற்ஸவ உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் யூலை மாதம் 20 ஆம் திகதி ஆடி அமாவாசையோடு பூர்த்தியாகும். (செ)

## மக்களின் தேவை சமாதானம்

(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்கள் சமாதானத்தையே வேண்டி நிற்கிறார்கள். பிரிவினை கோரவில்லை மாறாகத் தமது உரிமைகளையே கோருகிறார்கள்.

யாழ்ப்பாணத்திற்கு அங்கிலிக்கன் திருச்சபைப் பேராயர் அதி வணக்கத்திற்குரிய ரெலி டிஜிக்சேரா வருகை தந்தபோது, யாழ்ப்பாண மனித முன்னேற்றநடுநிலைய இயக்குநர் வணபிதா சி ஜி ஜெயக்குமார் அடிகளார் தெரிவித்துள்ளார். (உ-5)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)
நவாலி தெற்கு இத்தியடிப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர் வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கானகிரியைகள் இன்று ஆரம்பமாகின்றன. நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 00மணி தொடக்கம் மாலை 4 00 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது. (செ)

## தட்டெழுத்தாளர் நியமனம் நடவடிக்கை எடுக்கவும்
## அமைச்சருக்கு அவசரமகஜர்

(யாழ்ப்பாணம்)
வடக்கு- கிழக்கு மாகாண சபையின் கீழுள்ள அலுவலகங்களுக்கு தட்டெழுத்தாளர்களைச் சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சைக்கு யாழ். குடாநாட்டைச் சேர்ந்த பெருமளவினர் தோற்றி இருந்தும் சிறிய அளவினருக்கு மட்டுமே நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு மகஜர் மூலம் தெரிவித்துள்ளனர்

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

மேற்படி சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பல அலுவலகங்களில் தட்டெழுத்தாளர் (தமிழ் / ஆங்கிலம்) பதவிகளுக்கு வெற்றிடங்கள் இருந்தும் (உதாரணம் - வலயக் கல்வித் திணைக்களம், வலிகாமம் உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பளை) அவை நிரப்பப்படாதது மிகவும் கவலைக்குரியதாகும்.

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த பலர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாததாலும், இதுவரை நியமனம் ஏதும் கிடைக்காததாலும் விரக்தியுற்ற நிலையில் உள்ளனர்.

இந்நிலையில் மேற்படி போட்டிப் பரீட்சைக்குத் தோற்றாத பலருக்கு அமைய நியமனங்கள் வழங்கப்பட்டமை கவலைக்குரியதும், கண்டனத்துக்குரியதும் ஆகும் அமைய அடிப்படையில் நியமனம் பெற்றோர் திறமையானவர்கள் எனில், அவர்கள் மேற்படி போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தி பெற்றிருப்பின் அவர்களுக்கும் பெற்ற புள்ளிவரிசை ஒழுங்கில் நியமனங்கள் ஏனையோரைப் போன்று கிடைக்க வழி செய்யலாம்.

இதுதொடர்பாக வடக்கு-கிழக்குமாகாண ஆளுநருடன் கடிதமூலம் தொடர்புகொள்ளப்பட்ட போதிலும் உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. இவ்வாறு அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## முரண்பாடுகளைத்தீர்த்தல் கருத்தரங்கு நீர்வையில்

(யாழ்ப்பாணம்)
மகளிர் அபிவிருத்தி நிலையம் பாடசாலை மட்டத்தில் நடாத்திவரும் ''முரண்பாடுகளைத் தீர்த்தல்'' தொடர்பான சமூக ஒருங்கிணைப்புக் கருத்தரங்கு நாளைய தினம் யாழ். நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் யாழ். நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் எஸ். விஸ்வலிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

தேசியக்கல்வி நிறுவக விரிவுரையாளர் திருமதி புஷ்பா சிவனையா, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் கலாநிதி சபா ஜெயராஜா, சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி பாலாம்பிகை சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். (உ)

## வைத்தியசாலை வளவுக்குள்ளும் கால்நடைகளின்தொல்லை

(மந்திகை)
பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அண்மைக்காலமாக கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

வைத்தியசாலையைச் சுற்றி வேலிகளுக்குக்கவசமாக இருந்த பற்றைகள் அண்மையில் அபிவிருத்தித் தொண்டர்களால் சிரமதானப் பணிகள் மூலம் அகற்றப்பட்டதையடுத்து செப்பனிடப்படாத வேலிகளினூடாக ஆடு, மாடுகள் வைத்தியசாலை வளவுக்குள் நுழைந்து பயன்தரு மரங்களை அழித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக கிராம சேவையாளருடாக சூழல் கால்நடைபாதுகாப்புக்கு பொறுப்பானவர்களிடம் தெரிவிக்கப்பட்ட போதிலும் தொல்லைகுறைந்தபாடில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-23)

## ஒழுக்கம் இல்லாத கல்வி விழுப்பம் தராது
### யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கோப்பாய்)
ஒழுக்கமும் கல்வியும் எமது இரு கண்கள் என்பதையும் ஒழுக்கம் உயிரினும் பெரியது என்பதையும் எமது மாணவர்கள் மறந்து விடக் கூடாது.

ஒழுக்கமில்லாத கல்வியால் எதுவித நன்மையும் ஏற்படப் போவதில்லை இன்று பாடசாலை மாணவரின் ஒழுக்கம் சரிவு கோட்டில் சென்று கொண்டிருப்பது வேதனைக்குரியதே என்பதைஉணர்ந்து அதனைச் சீர் செய்ய கல்வி உலகம் முன்வர வேண்டும். இவ்வாறு நீர்வேலி அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்ற திறன் நயப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்தார். அதிபர் இ. குணநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மூத்தோர் சொல் வார்த்தையை மதித்து மாதா, பிதா, குருவின் சொல்லைக் கேட்டு எமது பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாப்போம் என்றார்.

கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம் தமதுரையில், மாணவர்கள் ஒழுக்கங்களைப் பேண வழிகாட்டிகளாகவும் முன்மாதிரியாகவும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் திகழ வேண்டும் எனவும் ஒழுக்கத்தை மேலும் உரமூட்டுவதில் இவர்களுடன் பெற்றோர்களும் இணைந்து கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (உ-79)

## வலி கிழக்கில் 20 இலட்சம் செலவில் வீதிகள் திருத்தம்

(யாழ்ப்பாணம்)
வலி கிழக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில், உள்ள வீதிகள் புனரமைப்பின் தொடர் வேலைக்கு என 20 இலட்சம் ரூபா நிதியினை வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வுபுனரமைப்பு மற்றும் வடக்கு- கிழக்கு தமிழ் விவகார அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்நிதியினைக் கொண்டு, புத்தூர் குமாரசாமி வீதி, அச்செழு வினோபாஜி வீதி, அச்சுவேலி உழவிக்குளம் பிள்ளையார் கோயில் வீதி, நீர்வேலி வெள்ள வாய்க்கல் வீதி, ஆகிய வீதிகள் புனரமைக்கப்படவுள்ளதாகவும்.

50 இலட்சம் ரூபா நிதி மதிப்பீட்டைக் கொண்ட இந்த வீதிப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 18 இலட்சம் ரூபா நிதி சென்ற வருடம் வழங்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் இறுதிக்கட்ட நிதியான 12 இலட்சம் ரூபாவினையும் அமைச்சரிடம் இருந்து பெற்று வீதி புனரமைப்பு வேலையினை நிறைவேற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## மட்டுவிலில் வெடிகுண்டுகள் மீட்பு

(கொழும்பு)
மட்டுவில் பகுதியில் கடந்த 22ஆம் திகதி படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது 4 மோட்டார்குண்டுகள் மற்றும் மூன்று கைக்குண்டுகள் என்பன கைப்பற்றப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

## சைக்கிள் களவு

(கல்வயல்)
வண்ணார்பண்ணை மேற்கு ஆலடிச்சந்தியில் அமைந்துள்ள தொலைத் தொடர்பு நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த அதன் உரிமையாளரது சைக்கிள் அண்மையில் திருட்டுப்போயுள்ளது. (உ-111)

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)
கந்தரோடை வற்றாக்கைப்பதி அருள்மிகு ஸ்ரீவிசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி ஆலயதேர்த்திருவிழா எதிர்வரும 27 ஆம் திகதி புதன் கிழமையும், தீர்த்தத் திருவிழா 28 ஆம்திகதி வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளன. (செ)

## ஊரடங்கு வேளையில் கள்வர் கைவரிசை

[யாழ்ப்பாணம்]
ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளை நேற்று முன்தினம் இரவு இராசாவின் தோட்டம் பகுதியில் இரு இடங்களில் கள்வர் தம் கைவரிசையைக் காட்டிச் சென்றுள்ளனர்.

கிராம அலுவலர் ஒருவரது அலுவலகம் இயங்கும் வீட்டினுள் புகுந்து பெறுமதி மிக்க தொலைக்காட்சிப்பெட்டியையும், றக்கா வீதியில் உள்ள ''அன்ரோ'' விற்பனை நிலையத்தில் புகுந்து 15 ஆயிரம் ரூபா பணத்தினையும், 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களையும் களவாடிச் சென்றுள்ளனர். (உ-104)

## வேலணை கால்நடை அலுவலகத்திற்கு மின்சாரம் வழங்கப்படவில்லை

(ஊர்காவற்றுறை)
வேலணை கால்நடை வைத்திய அலுவலகத்திற்கு மின்சாரம் வழங்கப்படாமையால் பெரிய சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி அலுவலகம் மாத்திரமே தீவுப்பகுதிகள் அனைத்திற்கும் செயற்பட்டு வருகின்றது.

மின்சாரம் வழங்கப்பட்டாமையால் கால் நடைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்குரிய மருந்து வகைகளைப் பாதுகாக்க முடியாதுள்ளதால் அவற்றை யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் எடுத்துச் செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அலுவலகத்திலுள்ள சூரிய சக்தியில் இயங்கும் குளிர் சாதனப் பெட்டி கடந்த மாதம் நடுப்பகுதியில் பழுதடைந்துவிட்டது என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (செ-75)

## தொடர்பு கொள்ளவும்

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்ற அங்கத்தவர் இதுவரை பொலிஸ் முறைப்பாடு பெற்றுக் கொள்ளாதவர்கள் உடன் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-23]

### இன்று ஒரு தகவல்

## நல்ல நண்பர்கள் மூவர்

முன்னொரு காலத்தில்ஒரு நாட்டில், பாவண்ணன், மதியழகன், அறிவரசன் என்ற மூன்று புலவர்கள்இருந்தனர். மூவருமே உயிருக்கு உயிரான நண்பர்களாக விளங்கினார்கள். அந்நாட்டு அரசன் தன்னைப்புகழ்ந்துபாடியபாவண்ணனுக்கு பணப்பைஒன்றைப் பரிசாக அளித்தான். வறுமையால்வாடிக் கொண்டிருந்த அறிவரசனின் மனைவி இதை அறிந்தாள். 'உங்கள் நண்பருக்குப் பெரும் பொருள் பரிசாகக் கிடைத்துள்ளது. ஆனால்நம் குழந்தைகளுக்கோ அடுத்தவேளை உணவுசாப்பிடக்கூடப் பொருள் ஏதும் இல்லை. நமக்கு உதவி செய்யுமாறு உங்கள் நண்பருக்கு மடல் எழுதுங்கள்' என்றாள்.

அதன்படி அறிவரசனும் மடல் எழுதி அதைஅவனுக்கு அனுப்பினான். பாவண்ணன பரிசுடன்தன்வீட்டிற்கு வந்தான் உதவி கேட்டு நண்பன் எழுதிய மடல் அவனுக்காகக் காத்திருந்தது. அதைப்படித்தஅவன், தான்கொண்டு வந்த பரிசுப் பொருளாகிய பணப்பையை அப்படியே அறிவரசனுக்குக் கொடுத்து அனுப்பினான்.

நடந்தவற்றைக் கண்ட பாவண்ணன் மனைவி வந்த பரிசுப் பொருள் முழுவதையும் உங்கள் நண்பருக்கு அனுப்பி விட்டீர்களே! நம் வீட்டு வறுமை உங்களுக்குத் தெரியாதா? இரவு நாமும்நம் குழந்தைகளும் சாப்பிடஎன்ன செய்வது?' என்று கேட்டாள் 'கவலைப்படாதே' என்ற பாவண்ணன், தன் நண்பன் மதியழகனுக்குப்பொருளுதவி கேட்டு மடல் எழுதினான். மதியழகனிடம் அப்போது பணம் இல்லை. உடனே அவன் தன் இன்னொரு நண்பனான அறிவரசனுக்கு பொருள் உதவி கேட்டு மடல் எழுதினான். அப்பொழுதுதான் பாவண்ணனின் பணப்பை அறிவரசனுக்கு வந்து சேர்ந்தது தன் நண்பனின் மடலைப் பார்த்ததும், அந்தப் பணப்பையைப் பிரிக்காமல் அப்படியே அனுப்பி வைத்தான். மதியழகன்அதை அப்படியே பாவண்ணனுக்கு அனுப்பி வைத்தான்.

தான்அறிவரசனுக்குஅனுப்பிய பணப்பையே மதியழகனிடமிருந்து வந்திருப்பதைக் கண்டு வியப்பு அடைந்தான் பாவண்ணன், நேராக இருவர் வீட்டிற்கும் சென்று அவன் நடந்தது என்ன என்ற உண்மைகளைத் தெரிந்து கொண்டான். இறுதியாக அந்தப் பணப்பையிலிருந்த தொகையை மூவரும் சமமாகப் பிரித்துக் கொண்டனர்.

பேராசிரியர் எ. சோதி.

# குழந்தை இலக்கிய ஆக்கங்கள் அருகிவருவது வேதனைக்குரியது

### வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

குழந்தை இலக்கிய ஆக்கங்கள் இக்காலத்தில் மிகக் குறைவாக உள்ளமை வேதனைக்குரியதாகும்.

தமிழகத்துடன் ஒப்பிடும் போது எமது பிரதேசத்தில் மிகக் குறைவான சிறுவர் இலக்கியங்களே வெளிவருகின்றன.

திருமதி பத்தினியம்மாதிலகநாயகம் போலின் மழலை அமுதம், 'தேன்வதை' ஆகிய நூல்கள் வெளியீட்டு விழாவில் ஆய்வுசெய்து உரை நிகழ்த்திய வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலாமகேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். பல்கலைக் கழக தமிழியற் துறைத்தலைவர் எஸ் சிவலிங்கராசா தலைமையில் மேற்படி பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றநிகழ்வில் அவர் தொடர்ந்து கூறுகையில்;

குழந்தை இலக்கியங்கள் அவர்களுக்கே உரியமொழி நடையில் ஏற்றமொழிப் பாவனையில் அவர்களின் சூழலை அறிந்து உளவியல் திறன், கற்பனை, அவதானம் என்பவற்றினை தூண்டும் வகையில் ஆக்கப்பட வேண்டும்.

',மழலை அமுதம்'' சிறுவர் இலக்கியம் சிறந்த குழந்தை இலக்கியமாக அவர்களுக்கே உரிய மொழி நடையில் உருவாக்கியமை திருமதி பத்தினி அம்மா திலகநாயகம் அவர்களின் சிறந்த படைப்பாற்றலாகும்.

குழந்தை இலக்கியங்கள் பொருத்தமான கதைகள் மூலம் தன்னலம் அற்ற தன்மைகளோடு பொது நலப் பண்புகள் குழந்தைகளிடம் வளரும் வகையில் ஆக்கம் பெற வேண்டும் என்கிறார்.

யாழ். பல்கலைக் கழக சமூகவியல், அரசறிவியல் துறைத் தலைவர் கலாநிதி நா. சண்முகலிங்கன் வெளியீட்டுரை நிகழ்த்தினார். கவிஞர் சோ. பத்மநாதன், சைவப் புலவர் சு. செல்லத்துரை உட்பட பலர் உரைநிகழ்த்தினர்.

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றம் இந் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது

(க-06)

### வவுனியாவில்

## ஒன்பது உணவுலொறிகள் படையினரால்தடுத்துவைப்பு

(வவுனியா)

படையினரால் விடுவிக்கப்படாத பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்லப்படவிருந்த அத்தியாவசியப் பொருட்கள் வவுனியாப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக படையினர்தெரிவித்துள்ளனர்.

பால்மா, சீனி, பருப்பு வகை, காகிதாதிவகை, சிறுவர்களுக்கான ஆடைகள் போன்ற 9 லொறிகளில் நிரப்பப்பட்ட பொருட்களே இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகத்தெரிவித்துள்ளனர்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்கு விநியோகிப்பதற்காக வவுனியா அரச அதிபருக்கு வழங்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்களும் இந்த லொறியில் அடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விடுவிக்கப்படாத பகுதிகளுக்கு செல்லவிருந்த 700 பேரும் அந்தப் பகுதிக்குச்செல்ல முடியாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

(செ-7)

### படைக்கு ஆள் சேர்க்க நேர்முகப்பரீட்சை

[கொழும்பு)

இராணுவத்தின் நிரந்தரப் படைப்பிரிவில் புதியவர்களை இணைத்துக் கொள்வதற்கான ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை யூலை முதலாந் திகதி ஆரம்பமாகி 31ம்திகதி வரை நடைபெறவுள்ளது.

மாவட்ட ரீதியாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நேர்முகப் பரீட்சை முல்லைத்தீவு, கிளிநொச்சி மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நடைபெறமாட்டாது.

(இ

## சிற்றூர்தி கட்டண அறவீட்டில் முரண்பாடாம்

(துன்னாலை)

பருத்தித்துறை யாழ்ப்பாணத்துக்கு இடையிலான சேவையில் ஈடுபடும் தனியார் சிற்றூர்திகளில், கட்டண அறவீடுகளில் முரண்பட்ட நிலை காணப்படுவதாக பயணிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

ஆவரங்காலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே பயணம் செய்வோரே அனேகமாக இக் கட்டண அறவீட்டு முரண்பாட்டில் மாட்டித் தவிப்பதாக கூறப்படுகிறது.

இதன் காரணமாக நடத்துநர் பயணிகளிடையே அடிக்கடி வாய்த்தர்க்கம் ஏற்படுவதால் சக பயணிகள் இடைஞ்சல்களுக்கு ஆளாகின்றனர்,

(உ-41)

### போதனாசிரியர்

## கொடுப்பனவுகள் வழங்குவதில் இழுத்தடிப்பு

(கோப்பாய்)

இவ்வருட முற்பகுதியில் யாழ் வலயக்கல்வித்திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினால் அமுல் செய்யப்பட்ட பின்தங்கிய பிள்ளைகளின் கணிதபாட போதனாசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் இன்னமும் வழங்கப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

இதனை வழங்குவதில் உரிய நிர்வாகம் அசமந்தப் போக்கினைக் கடைப்பிடிப்பதாகப் போதனாசிரியர்கள் தெரிவித்தனர்.

(உ-79)

### ஊர்காவற்றுறை

## ஆஸ்பத்திரியில் வழமைபோல் வைத்திய சேவைகள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை, அனலைதீவு கிராமிய வைத்தியசாலை ஆகியவற்றின் வைத்திய சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன.

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய சாலை வைத்திய அதிகாரி ரி.சீவரத்தினம் திடீர் சுகயீனம் காரணமாககடந்தஒருமாதகாலமாக லீவில் சென்றிருந்தமையால், அனலைதீவு கிராமிய வைத்திய சாலையின் வைத்திய அதிகாரி என் நடராஜா இரு வைத்திய சாலைகளிலும் கடமை ஆற்றி வந்தார்.

வாரத்தில் நான்கு நாட்கள் ஊர்காவற்றுறையிலும், இரண்டு நாட்கள் அனலைதீவிலும் ஒரு வைத்திய அதிகாரியே கடமையாற்றி வந்தமையால் சிகிச்சை பெறுவதில் மக்கள் சிரமத்தினை எதிர் நோக்கி வந்தனர்.

இப்போது சிரமமின்றி வழமைபோல் பொதுமக்கள் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

(செ-75)

### பல்கலையில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான சங்கத்தினரின் கருத்தரங்குத் தொடரில் ''மனித உரிமையைப் புரிந்து கொள்ளல்'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு எதிர்வரும் 27ஆம் திகதி காலை 10.00 மணியளவில் மேற்படி பல்கலைக் கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கத்தோலிக்க மறை மாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழுவின் தலைவர் வணபிதா அல்போன்ஸ் இருதயநாதன் இக்கருத்தரங்கில் உரையாற்றவுள்ளார்.

(க- 06)

### நம்பிக்கையில்லாபிரேரணை

## விவாதிக்கப்படும் தினம் யூலை 3ல் தெரியும்

(கொழும்பு)

சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கெதிராக, ஐக்கியதேசியக்கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப்பிரேரணையைவிவாதத்துக்கு எடுத்துக்கொள்வது தொடர்பாக அடுத்த மாதம் 3ந்திகதி முடிவு செய்யப்படவுள்ளது.

பாராளுமன்றக் கட்சித் தலைவர்களின் மகாநாடு சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்காவின் தலைமையில் அடுத்த மாதம் 3ந்திகதி நடைபெறவுள்ளது

அம்மாநாட்டிலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளும் திகதி நிர்ணயிக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அடுத்த மாதம் முதல் வாரம் அல்லது மூன்றாவது வாரத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்று தான் நம்புவதாக ஐக்கியதேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜெயசூரியா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மிக விரைவில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைவிவாதத்துக்கு எடுக்க வேண்டுமென்று ஐக்கியதேசியக்கட்சியினர் பாராளுமன்றச் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ)

### அனுமதி அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

இம் மாதம் 30 ஆம் திகதி கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் நடைபெறவுள்ள நிருவாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான அனுமதியட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

அனுமதிஅட்டைகள்கிடைக்கப் பெறாதவர்கள் நாளை 26ம் திகதிக்கு முன்னர் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு, வெளிநாட்டுப்பரீட்சைகள் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-3)

## அமைச்சர் டக்ளஸ் 12 லட்சம் நிதி உதவி

[யாழ்ப்பாணம்]

கொக்குவில், கோண்டாவில் பகுதியில் உள்ள இரு ஆலயங்களில் புனரமைப்புச் செயற்பாட்டுக்காக வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்புமற்றும்வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 12 இலட்சம் ரூபாவினை வழங்கியுள்ளார்.

ஈ.பி.டி.பி யின் யாழ். மாவட்டத்தலைமைச் செயலகத்தில் வைத்து, கோண்டாவில், நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவிலின் இராஜ கோபுர வேலைக்காக 7 இலட்சம் ரூபாவும் தாவடி, வேம்படி முருகமூர்த்தி கோயில் புனரமைபபுப் பணிகளுக்கு 5 இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

ஆலய நிர்வாகப் பிரதிநிதிகளின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் நிதியிலிருந்து நிதி வழங்கியுள்ளார்.

(க)

### ஊர்காவற்றுறையில்

## வெளிக்கள குடும்ப நலசேவை உத்தியோகத்தர் நியமனம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடமையாற்றுவதற்காக வெளிக்கள குடும்ப நலசேவை உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடமையாற்றிய செல்வி வசந்தாதேவி தாமோதரப்பிள்ளை என்பவரே மேற்படி பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

தீவுப்பகுதியில் கடமையாற்றுவதற்கு முப்பதுக்கும் மேற்பட்ட வெளிக்கள குடும்ப நலசேவை உத்தியோகத்தர்கள் தேவையாக உள்ளபோதிலும் ஒருவரே மேற்படி சேவைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

குடும்பநல சேவை உத்தியோகத்தர்களை நியமிக்கும்படி பொது அமைப்புக்கள் பலவேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(செ-75)

## வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

★ **கணவர்கள் காப்பகம்**

எமது நாட்டில் அன்றாடம் எது எதற்கோ எல்லாம் சங்கம் தொடங்கிக் கொண்டிருக்கும் போது இந்தியா- பெங்களூர் வாசிகள் ஒரு படி மேலாகச் சென்று ''கணவர் நலச் சங்கம்'' என்று ஒரு சங்கத்தை அமைத்துள்ளார்கள்.

கொடுமைக்கார மனைவிகளிடம் இருந்து கணவர்களைப் பாதுகாக்க ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கம் பெங்களூரைச் சேர்ந்த ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி எ.ஆர் சிங் மற்றும் உயர் நீதி மன்ற வழக்கறிஞர் ஆர் டி. சுக் என்பவர்களின் அனுசரணையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாம். பொலிஸ் அதிகாரிக்கே இந்த நிலையா...?

★ **தும்மலில் கிட்டிய சாதனை**

அன்றாடம் பல்வேறு நிகழ்வுகளின் மூலம் சாதனை படைத்து வரும் இவ்வுலகில் தும்மலின் மூலமும் ஒருவர் சாதனை படைத்தார் என்றால் நம்ப முடிகிறதா?

மொராக்கோ நாட்டைச் சேர்ந்த 13 வயதுச் சிறுவன் ஒருவன் 6 நாட்களில் 1100 முறை தும்மியதன் மூலம் இந்தச் சாதனையை ஏற்படுத்தி உள்ளான். இவன் தினமும் சராசரியாக 220 தடவைகள் தும்மியுள்ளானாம் தனது சாதனையை முறியடிக்க யாரால் தும்ம முடியும் என்று சவால் வேறு விட்டிருக்கிறானாம் சிறுவன்.

-அவதானி-

## வங்காள மாநிலத்தில் படகு விபத்து
## 34 பேர்பலி; பலரைக் காணவில்லை

(புதுடில்லி)

இந்தியாவின் வங்காள மாநிலத்தில் படகு ஒன்று கவிழ்ந்ததில் 34 பேர் பலியாகியுள்ளனர். நேற்று முன் தினம் மனிச்சாப் என்னுமிடத்தில் கங்கை யாற்றுப் பகுதியில் இவ்விபத்து நடந்துள்ளது.

விபத்துக்குள்ளான படகில் 100 ற்கும் அதிகமான பயணிகள் இருந்ததாகவும், அவர்களில் 66 பேரை உயிருடன் மீட்டதாகவும் 4 சடலங்களை மீட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 30 பேர் நீரில் மூழ்கியுள்ளதாகவும் அவர்களின் நிலைபற்றி இன்னும் தெரிய வரவில்லை என்றும் கூறப்படுகிறது.

கடந்த வாரத்தில், மண் சரிவு, வெள்ளப் பெருக்கு, பூமி அதிர்ச்சி, போன்ற அனர்த்தங்களில் 5_0 பேருக்கு மேல் பலியானதுடன், 300 பேருக்கு மேல் காணாமல் போயுள்ளதாகவும் இந்தியச் செய்திகள் தெரிவித்துள்ளன. (செ-7)

## ஆபிரிக்கக் கடலில் தத்தளித்த சுவீடிஷ் கப்பல் மீட்கப்பட்டது
### தற்போது நைஜீரியாவை நோக்கிச் செல்கிறது

(லாகூர்)

இயந்திர சுழலியில் மீன் வலைகள் சிக்கியதால் கடந்த இருவாரங்களாக ஆபிரிக்காவுக்கு அண்டிய கடலில் 186 பயணிகளுடன் தத்தளித்த சுவீடிஷ் பயணிகள் கப்பல் தற்போது ஆபத்தான கட்டத்தைக் கடந்து நைஜீரியா நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

எம் ஜி 'கல்நார்' என்ற இந்தக் கப்பலில் பயணம் செய்தவர்களில் அனேகர் பெண்களாவர்

இதேவேளை, மீட்டெடுக்கப்பட்ட மேற்படி பயணிகள் கப்பல் எரிபொருள் நிரப்புவதற்காக லெனின் துறை முகத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட போது,

அக்கப்பலை ஏற்றுக் கொள்ள தயாராக இருப்பதாக நைஜீரியா அறிவித்த காரணத்தினால் அங்கு எரிபொருள் நிரப்ப மறுக்கப்பட்டதாகவும்,

பின்பு கொலோனோ துறைமுகம் கொண்டு செல்லப்பட்டு அங்கு பயணிகளுக்கு வேண்டிய உணவு வகைகள் வழங்கப்பட்டதோடு, எரிபொருள் நிரப்பப்பட்டதையடுத்து நைஜீரியா நோக்கி அக்கப்பல் இப்போது பயணம் செய்வதாக தெரிய வந்துள்ளது.

இக்கப்பலில் லைபீரியாவைச் சேர்ந்த 186 பயணிகள் கானா செல்வதற்காக பயணம் செய்வது குறிப்பிடத்தக்கது. (உ-7)

தாய்லாந்தில்
## திடீர் சூறாவளியினால் விமான சேவை பாதிப்பு

(பாங்கொக்)

தாய்லாந்தில் கடந்த வியாழக்கிழமை காலை வீசிய திடீர் சூறாவளியால் விமான சேவைகள் பாதிப்படைந்தது.

இச் சூறாவளியால் தாய் வானில் இருந்து புறப்படும் சேவைகள் அனைத்தும் இடை நிறுத்தப்பட்ட அதேவேளை, வேறுநாடுகளில் இருந்து தாய் வானுக்கு வரும் விமானங்களும அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டன.

இதுவரையில் விமான சேவைகள் வழமைக்குத் திரும்பவில்லை எனவும் தெரிவிக்கின்றது. (செ-7)

## இந்தியாவின் கனவு விரைவில் நனவாகும்

(சென்னை)

சந்திரனுக்குச் செல்லும் இந்தியாவின் முதலாவது விண்வெளிப்பயணத்திட்டம் அடுத்த சில ஆண்டுகளில் நனவாகிவிடும் என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் தலைவர் டாக்டர் க. கஸ்தூரிரங்கன் அறிவித்திருக்கிறார்.

இந்தியாவில் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுவரும் பெரும் முன்னேற்றத்துக்கு ஈடு கொடுக்கும் வகையில் அடுத்த 10 ஆண்டுகளில் 7 தொடக்கம் 10 செயற்கைக்கோள்களும் மற்றும் அமைப்புகளும் நாட்டிற்கு தேவைப்படுமென்றும், மிக உயர்ந்த தொழில்நுட்பம் கொண்ட செயற்கைக் கோள் ஒன்றை தமது ஆராய்ச்சி அமைப்பு உருவாக்கி வருவதாகவும் அவா குறிப்பிட்டுள்ளார். (உ)

## ஒரே தினத்தில் நான்கு கோள்களை இந்தியா விண்ணிற்கு அனுப்பும்

(புதுடில்லி)

ஒரே தினத்தில், இந்தியா நான்கு செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்த இருக்கிறது;

இந்தியாவின் செயற்கைக் கோளுடன் ஜெர்மனி மற்றும் பெல்ஜியம் போன்ற நாடுகளின் செயற்கைக் கோள்களையும் இந்தியாவில் ஏவுகணை மூலம் அனுப்ப இருக்கிறது.

எதிர் வரும் செப்டெம்பர் மாதம் பிஎஸ்எல்வி ஏவுகணை மூலம் நான்கு செயற்கைக் கோள்களையும் இணைத்து அனுப்பும் முயற்சியில் இந்திய விஞ்ஞானிகள் பணியாற்றி வருகின்றனர்.

கடந்த ஏப்ரல் மாதம் ஏச். எம். பி. ஏவுகணை மூலம் செயற்கைக் கோள் ஒன்றை இந்தியா அனுப்பி வெற்றி கண்டது குறிப்பிடத்தக்கது; (து)

## விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் கைது

[சென்னை]

விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் தமிழ் நாட்டில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக் கட்சியின் பொருளாளர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ; அமைப்பினர் விசாரணை நடத்த வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டம் செய்த போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்;

இவருடன் சுமார் ஆயிரத்து நானூறு தொண்டர்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கைதுகுறித்து தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். (உ-8)

### முதலமைச்சர் மகன் மயிரிழையில் உயிர் தப்பினார்

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் முதலமைச்சர் பாரூக்அப்துல்லாவின் மகன் பயணம் செய்த ஹெலிகொப்டர் மீது றொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காகச் சென்று கொண்டிருந்த போதே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனினும் முதலமைச்சரின் மகன் இத்தாக்குதலில் இருந்து மயிர் இழையில் உயிர் தப்பியுள்ளார்.

காஷ்மீரில் தீவிரவாதிகளால் இந்த றொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

மத்திய கிழக்கில்
## யுத்த நிறுத்தம் ஏற்படுத்த அமெரிக்கா விடாப்பிடி

(ஜெருசலம்)

மத்திய கிழக்கில் அமெரிக்கா மேற்கொண்டு வரும் யுத்த நிறுத்த முயற்சிகள் வெற்றி அளிக்காமல் போகுமோ என அஞ்சப்பட்டு வருகிறது.

மேற்குக் கரை மற்றும் காஸாப் பகுதிகளில் புதிதாக வெடித்துள்ள வன்முறைகளின் காரணமாக கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 10 பேர் கொல்லப்பட்டதையடுத்தே இந் நிலை எழுந்துள்ளது.

இதேவேளை, மத்திய கிழக்குப் பிரதேசத்தில் அமைதிப் பேச்சை ஏற்படுத்தும் முகமாக அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவலை அடுத்த வாரம் மத்திய கிழக்கிற்கு அனுப்பி வைக்கவுள்ளதாகவும அமெரிக்கா அறிவித்துள்ளது. (உ-7)

## உலக வங்கியால் சீனாவுக்கு 100 கோடி டொலர் கடன்

(பேஜிங்)

சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக சீனாவிற்கு 100 கோடி டொலர் கடனுதவியை உலக வங்கி வழங்கத் தீர்மானித்துள்ளது.

சீனாவில மிக மோசமான நிலையில் காணப்படும் சுற்றாடல் வளத்தை மேம்படுத்தவும் மாசடைந்த நிலையில் அங்கே காணப்படும் பகுதிகளைத் தூய்மைப்படுத்தவுமே குறித்தகடனுதவி வழங்கப்படவுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

இன்னும் ஓரிரு மாதங்களில் இக் கடனுதவி வழங்கப்படவுள்ளதாக மேற்படி வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (உ-9)

### செய்திப்பரல்

★ பிரபல கிதார் இசை வல்லுநர் ஜோன்லீ ஹூக்கர் தனது 83 ஆவது வயதில் சான் பிரான்ஸிஸ் கோவில் காலமானார்.

★ வியட் நாமின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி, சீர்திருத்தவாதியான நிகுயென் வான் ஆன் தேசிய அசெம்பிளி தலைவராக நியமிக்கவுள்ளது.

★ பெரு நாட்டின் உளவுத் துறைத் தலைவருக்கு தான் அடைக்கலமளிக்கவில்லை என வெனிசூலா ஜனாதிபதி சாவெஸ் தெரிவித்துள்ளார்;

★ தாஜ்மஹாலைப் பாதுகாப்பாக பராமரிப்பதற்கு டாட்டா நிறுவனம் முன்வந்துள்ளது. (உ-3)

தமிழக அரசிலில்
## சூடு பிடித்துள்ளது புண்ணாக்கு விவகாரம்

(சென்னை)

'மக்களுக்கு புண்ணாக்கு கொடுத்தது யார்?' என்ற சர்ச்சை தமிழகத்தில் தற்போதுதோன்றியிருக்கிறது.

கருணாநிதியின் ஆட்சியில் கர்ப்பிணிகள், குழந்தைகளுக்கு சத்துணவு மாவு உருண்டை வழங்கும் திட்டத்தில் புண்ணாக்கே வழங்கப்பட்டது என்றுமுதல்வர்ஜெயலலிதா குற்றம் சாட்டியிருக்கிறார்;

ஆனால் சத்துணவு என்ற பெயரில் புண்ணாக்கு வழங்கப்பட்டமை முன்னர் அ.தி.மு.க ஆட்சி செலுத்திய போதே இடம் பெற்றது என முன்னாள் தி.மு.க. அமைச்சர் ஐ. பெரியசாமி கூறியிருப்பதுடன்,

முன்னர் இருந்த அ.தி.மு.க ஆட்சியில் புண்ணாக்கு கொள்வனவு செய்வதற்கான உத்தரவுகள் வழங்கப்பட்டதற்கான ஆவணங்கள் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (உ-8)

உற்ற நோய் நீக்கி உறா
அமை முன்காக்கும்
பெற்றியார்ப்பேணிக்கொளல்
குறள்

வலம்புரி

## தளபதிகூறிய உண்மை!

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை நடக்குமாயின் அதனை இராணுவம் ஒருபோதும் எதிர்க்காது மாறாக பெரும் மகிழ்ச்சியடைவர். இவ்வாறு கூறியவர் வேறுயாருமல்ல, இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் பலகல்லே.

இராணுவத்தளபதியின் இக்கூற்று மேலோட்டமானதல்ல, படையினரின் மனோநிலையை துல்லியமாக வெளிக்காட்டியுள்ளது.

சாதாரண படையினரின் மனோநிலை இந்தக் கொடியயுத்தம் அடங்கி தாம் தங்களின் பெற்றோர், மனைவி, மக்களுடன் சேர்ந்துவாழவேண்டுமென்பதேயாகும். என் செய்வது ஏழ்மையின் கொடுமையும், இனப்பிரச்சினையின் தார்ப்பரியத்தை விளங்கிக்கொள்ள முடியா அறியாமையும் படையில் சேரவேண்டியதாயிற்று. சேர்ந்துவிட்டால் மீண்டும் வீடுசெல்ல முடியாதவகையில் இறுக்கமான சட்டங்கள், இந் நிலையில் படையினரின் உண்மையான உள்ளக் கிடைக்கைகளை இராணுவத்தளபதி லயனல் பலகல்லே ஒழிப்பு மறைப்பு இன்றி வெளிப்படையாகக் கூறியுள்ளார்

அரசு புலிகள் பேசுவதால் படையினர்மகிழ்ச்சியடைவார்களென இராணுவத்தளபதி கூறியிருக்கும்போது, புலிகளுக்கெதிராகயுத்தம் மேற்கொள்ள வேண்டுமெனக் கங்கணம் கட்டிநிற்கும் ஜே வி. பி சிஹலஉறுமய மற்றும் பௌத்த பீடாதிபதிகள் இனிமேலாவது சற்றுச் சிந்திப்பது காலத்தின்தேவையாகும்.

போர்க்களத்தின் அனுபவமும், யுத்தத்தின் போது படைத்தரப்பில் ஏற்பட்ட உயிரிழப்புகளும் இராணுவத் தளபதியின் கூற்றுக்குக் காரணமாக இருக்கலாம். எப்படியாயினும் கடந்த காலங்களில் படைத்தளபதிகள் சாதாரண சிப்பாய்களின் மனநிலையைப் புரிந்து கொள்ளாது யுத்தத்தையே முதன்மைப்படுத்தினர்.

ஆனால் மேஜர் ஜெனரல் பலகல்லே மட்டும் உண்மைநிலையைகூறியுள்ளமை, படைத்தரப்பின் உயர்பீடமும் யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரவேண்டுமென்பதில் தெளிவாக இருக்கிறார்கள் என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது.

---

### சைவ சமயத்திற்கு மீண்டுமோர் பேராபத்து

# இன யுத்தத்தைப் பயன்படுத்தி மதம் மாற்றுவதில் சில கிறிஸ்தவ அமைப்புகள் களத்தில் குதிப்பு

## ஆங்கிலேயர் தந்த வேதனையில் மீண்டும் சைவமக்கள்

இலங்கையில் என்று இன யுத்தம் தொடங்கியதோ அன்று முதல் மக்கள் நிம்மதி யிழந்தனர். வாழ்க்கையில் விரக்தி, மனநிலை பாதிப்பு, சீ.. என்ன மனித வாழ்க்கை என்னும்அளவிற்கு யுத்தத்தின் கொடூரம் புரையோடி விட்டது.

சைவத்தை அழித்து சைவசமயத்தவர்களுக்கு தீராத வேதனையைக்கொடுத்தது போல் வடபுலத்தில் நடக்கும் யுத்தத்தைப் பயன்படுத்தி சில கிறிஸ்தவ அமைப்புகள் சைவ சமயத்தவர்களை தம்பக்கம் இழுத்து இணைத்து வருகின்றன.

உயிர்களைக் காவுகொள்ளும் போது, மறுபுறத்தில் சில கிறிஸ்தவ அமைப்புகள் 'சிவ பூமியை' 'கிறிஸ்தவ பூமியாக்குவதில்' முனைப்புடன் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன தமிழர்களாக இருந்து கொண்டு வெள்ளைக்காரர்களின் கூலிக்காக நம் மண்ணின் சமய கலாசாரத்தை விற்கும் கூலிக்கூட்டங்கள், சைவ பாரம்பரியத்தை அடியோடு அழிக்க முற்பட்டுள்ளன

மதம் மாற்றுவோர் சைவத் தெய்வங்களை 'சாத்தான்கள்' எனக் கூறுகிறார்களெனில் இவர்களை விடச்சிங்களவர்கள் எவ்வளவோ நல்லவர்களெனலாம். ஏனெனில்அவர்களிடம் சைவத்தை-கிறிஸ்தவத்தை-இஸ்லாத்தை மதிக்கும் உயரிய பண்புகளுண்டு. மதம் மாற்றும் எண்ணம்

பேசாமல் இருப்பதால் எதுவும் தெரியாமல் இருப்பதாக மதம் மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளகிறிஸ்தவஅமைப்புகள் எண்ணக் கூடாது. அவ்வாறு எண்ணினால் 'ஒரிஸா நிகழ்வுகள்' இலங்கையின் வடபுலத்திலும் நடக்க வாய்ப்புண்டாகும்.

### வெளிநாட்டுத் தூதர்களின் வருகை

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள படும் அவலங்களை நேரில் அறிவதற்காக யாழ் வருவதாகக் கூறும் வெளிநாட்டுத் தூதவர்கள் சிலரின்

**விதுரன்**

வருகை மறைமுகத்தில் மதம் மாற்றும் நோக்குடையதே. இதனை சைவமக்கள் மறந்து விடக்கூடாது.

## குருக்ஷேத்திரம்

தமிழ்- சிங்களம் என்னும் மொழிகளால் ஏற்பட்டதே இனயுத்தமெனக் கூறினும் மறைமுகமான உண்மை இரு மொழிக்குள் மறைந்துநிற்கும் மதங்களின் பிரிவேயாகும்.

அன்னியராட்சிக்குள் இலங்கை அகப்பட்ட காலத்தில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆங்கிலேயரின் வருகை வரலாற்றுச் சிறப்பு மிக்க ஈழத்துச் சைவாலயங்களை அடியோடு அழித்தது. கிறிஸ்தவ சமயத்தை இலங்கையில் பரப்புவதற்காக சைவாலயங்களை அழித்தும். சைவ அனுட்டானங்களை மேற்கொண்டவர்களை வெட்டிக் கொன்றும் அவர்கள் செய்த அட்டூழியங்கள் கொஞ்சமல்ல எனினும், சைவத்தின் தொன்மையும், அதனுள் பொதிந்துள்ள ஆழமான-அர்த்தமுள்ள சிந்தனைகளும், சைவப் பெரியார்களின் தியாகமும் சைவத்தைக் காப்பாற்றியது.

### அன்று நடந்தது இன்றும் நடக்கிறது

அன்று இலங்கை குடியேற்ற நாடாக இருந்தபோது சைவத்திற்கு ஏற்பட்ட அழிவுகள் இன்றும் நடந்து கொண்டே இருக்கின்றன.

வியாபாரமென நுழைந்த ஆங்கிலேய வெறியர்கள் வறியவர்களுக்கு நாலு மரமும், நூறு கிடுகும் கொடுத்துவிட்டு அவர்களை ஏமாற்றி அவர்களின் வறுமையைத் தமக்குச் சாதகமாக்கி மதம் மாற்றும் குழுக்கள் வடபுலத்தில் இப்போது பாதீனியக் களைப்போல் வேகமாகப்பரவத் தொடங்கியுள்ளது.

# வெளிநாட்டுத் தூதர்களின் வருகை

## மதம் பரப்பும் நோக்குடையதே

அன்று ஆங்கிலேயரால் வேதனைப்பட்ட சைவத் தமிழர்கள் இன்று அப் பரம்பரையின் கூலிப் பட்டாளங்களால் வேதனையடைந்துள்ளனர்.

ஒவ்வொரு பிரஜையும் தத்தமது சமயங்களை அனுசரித்துச் செல்வதற்குப் பிறசமயங்கள் ஒத்துழைப்புவழங்கவேண்டும்.

அதை விடுத்து வைத்தியசாலை சென்று அங்கிருக்கும் நோயாளிக்காகச் செபித்துவிட்டு அந்நோயாளியை தங்கள் சமயத்தில் இணையுமாறு வற்புறுத்தும் பாதகச் செயல் ஆங்கிலேயர் காலத்திலும் நடந்ததில்லை.

### சிங்களவர்கள் நல்லவர்களே

ஒரு புறத்தில் யுத்தம் மனித அவர்களிடம் அறவேயில்லை.

சைவத் தெய்வங்களைச் சாத்தான்களென அவர்களின் மொழியில் கூறுவதாயின்சாத்தான்களைத் தெய்வமாகக் கொண்டியங்கும் சமயத்திலிருக்கும்ஒழுக்கம்-பண்பு, மதம் மாற்றுகின்ற சமயங்களில் இல்லையெனில். இங்குசாத்தான் உயர்ந்து விடுகிறதல்லவா?

பரிசுத்தத்தை வாசிக்கப் படலை தட்டும் போது வாருங்கள், இருங்கள் எனவரவேற்கும் சைவத்தவர்கள் வணங்கும் தெய்வங்கள் சாத்தான்களாக இருந்தால் மதம் மாற்ற வீட்டுக்குள் வருவோரை சாத்தான் என்ன செய்யுமென்று தெரியுமல்லவா?

தமது சமயம் யுத்த சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் எப்படி வேகமாக பரவியுள்ளதா என்பதை அறியவும் அதனை நேரில் பார்வையிடவுமே இத் தூதர்கள் யாழ். வருகிறார்கள்.

ஆனால் அப்பாவிப் பொதுமக்கள் ஏதோ வெள்ளையர்கள் வந்துள்ளார்கள் நமக்கும் விடிவு காலம் உண்டென நம்புகிறார்கள். யாழ்ப்பாணத்து நிலைமை நேற்று இன்று ஏற்பட்டதல்ல, கடந்த இருபது வருடங்களாகயுத்தத்தால் பாதிப்படைந்துள்ளது.

இப்போது மட்டும் நேரில் பார்க்க வேண்டும் என்பது சீதைக்கு முன் தோன்றிய மானின் விளையாட்டல்லவா?

(அடுத்த திங்கள் தொடரும்

---

# தேனினும் இனிய திருவாசகம் தந்தவரான தென்னவன் பிரமராயனெனும் திருவாதவூரர்

சைவ சமயம் காட்டும் சமய குரவர்களினுள்ளே ஞானமார்க்கத்திலே நின்று சிவசாயுச்சிய முத்தியடைந்த மாணிக்கவாசகர் குருபூசைத் தினம் ஆனி மகம் ஆகும். திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்பது பெரியோர் முடிவு.

### திருவாதவூரர்

பாண்டி நாட்டிலே மதுரையை அடுத்துள்ள திருவாதவூரிலே தோன்றிய மாணிக்கவாசகரின் இயற்பெயர்குடும்ப வரலாறு என்பன யாராலும் அறியப்படவில்லை. இவர் பாண்டிய அரசனால் முதன் மந்திரியாக்கப்பட்டு 'தென்னவன் பிரமராயன்' என்னும் பட்டபெயரால் சிறப்பிக்கப்பட்டமை மட்டும் தெரியக்கிடைத்துள்ளது. சம்புபாதாசிரியர் சிவஞானபதி ஆகியோருக்கு மகனாக இவர் பிறந்தார். திருவாதவூரில் பிறந்தமையால் 'திருவாதவூரர்' எனவும் இவர் அழைக்கப்பட்டார்.

அரசனின் கட்டளைப்படி குதிரை வாங்கச் செல்லும் வழியில் இறைவனின் திருவிளையாடலால் இவரது வாழ்க்கை திசைமாறி முற்றிலும் ஆன்மீகமயப்பட்டதாய் ஆகிவிட்டது. குருந்த மர நிழலில் இவருக்காகவே குருவடிவாகி வந்திருந்த சிவபெருமான் அரசன் கொடுத்தனுப்பிய பொன்னைப் பெற்றுக்கொண்டு ஞான உபதேசம் கொடுத்து ஆட்கொண்டு விட்டார். ஆட்கொண்ட அடியவனுக்காக எம்பிரான் அடி வாங்க வேண்டியும் ஏற்பட்டது.

**சி. ஜெயகணேஷன்**

### இறைவனுந்த அடி

பாண்டி நாடு செய்த தவத்தின் பயனாக குருந்த மர நிழலிலும் குதிரைப்பாகனாகவும் தோன்றித் திருவிளையாடல் புரிந்த சிவபெருமான் பின்னர் கூலியாளாக வந்து கோமகனால்தண்டனையைப் பெற்றார். அந்த அடி எல்லா உயிர்களிலும் பட்டமையால் இறைவனின் சர்வ வியாபகத் தன்மை தெரிய வந்தது. புத்த சமயத்தோரை வாதிலே வென்று ஊமை இளவரசியைப் பேச வைத்து இறைவன் அருளை வெளிப்படுத்தினார்.

[8ம் பக்கம் பார்க்க]

---

நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன்
ஆலயக் கொடியேற்றம் இன்று.

## நலிவதனை நீக்குமம்மா

எந்த நிலை வந்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
உந்தன் திருவடியை ஒரு நாளும் நான் மறவேன்
சந்தக் கவிதை கொண்டு சாற்றியுனைப் போற்றுகின்றேன்
நந்தாவில் கோயில் கொண்ட என்தாயே நீயருள்வாய்!

கற்புலத்து மனோன்மணியேகருணையுள் எம் கொண்டவளே!
நற்றவத்தோர் கொண்டாடும், நாரணியே, நாயகியே!
கொற்றவையே, உமையே கொடியேற்றம் காணுமுற்றன்
நற்றாளைப் போற்றுகின்றோம் நலிவதனை நீக்குமம்மா.

**மதிவாணர்.**

# யாழ். மக்களின் நன்மை கருதி டாக்டர்தெய்வேந்திரனின்சேவையை மாநகரசபைமீண்டும்பெறவேண்டும்!

## முதல்வர் ரவிராஜிற்கு புளொட் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாநகரசபையின் சுகாதாரவைத்திய அதிகாரியாக வைத்தியகலாநிதி இ·தெய்வேந்திரனை மீண்டும் நியமித்து அவரின்சேவையை மக்களுக்கு கிடைக்கஉதவுமாறு புளொட்அமைப்பின் மாநகரசபை உறுப்பினர்கள் யாழ்முதல்வர் ரவிராஜ்க்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் கேட்டுள்ளனர்:

புளொட் மாநகரசபை உறுப்பினர்கள் சார்பில் அவ்வமைப்பின் யாழ்மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பி.தனபாலசிங்கம் கையொப்பமிட்டு அனுப்பிவைத்துள்ள அக்கடிதத்தில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பலஅசம்பாவிதங்களின் மத்தியிலும் டாக்டர் இ. தெய்வேந்திரன் மக்களுக்கு சேவையாற்றியவர். அவரின் சேவை மீண்டும்யாழ்.மாநகர மக்களுக்குக் கிடைக்க ஆவன செய்யவேண்டும்;

அதேவேளை பகிஷ்கரிப்பை கைவிட்டு மீளவும் கடமைக்குத் திருப்பியுள்ள குடும்பநல சேவையாளர்களுக்கும், சுகாதாரப்பகுதி உத்தியோகத்தர்களுக்குமிடையே முரண்பாடுளும் - கருத்து வேற்றுமைகளும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

அத்துடன் 1993ம் ஆண்டு மாநகரசபையால் பத்திரிகை மூலம் விளம்பரப்படுத்தி சேவையில் சேர்க்கப்பட்ட குடும்ப நல உதவியாளர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

எனவே இது விடயத்தில் தலையிட்டு உடன் நடவடிக்கை எடுக்குமாறும் மாநகர முதல்வரிடம் கேட்கப்பட்டுள்ளது: (ந)

### அரசைக் ...

தால் மட்டுமே அவர்கள் மீதானதடையைநீக்கவேண்டுமென்பது ஜே. வி. பி. யின் நிலைப்பாடாகும்,

இதைப்போலவே தனியான நிர்வாக மாவட்டத்தைகோரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கைக்கும் ஜே. வி. பி. தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் தமிழ்க் கட்சிகளின் உதவியுடன். ஐக்கிய தேசியக்கட்சியினால சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தொடர்பாக அரசாங்கமும் ஐக்கிய தேசியக் கட்சியும் தமக்கு ஆதரவு நல்குமாறு வற்புறுத்திவருகிறார்கள்; இச்சந்தர்ப்பத்தில் நம்பிக்கை இல்லாத்தீர்மானத்திற்கு தமக்கு ஆதரவுதேடிக்கொள்வதற்காக ஏனைய அரசியல் கட்சிகளுடன செய்துகொள்ளும் உடன்படிக்கைகள் பற்றியும் கவனமாக உளளோம என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில பதவியில் உள்ள அரசை இறக்கிவிட்டு புதிய அரசாங்கம ஏற்படுத்தினாலும் அதில் எந்தவ்மான மாற்றமும் ஏற்படபபோவதில்லை என்றும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்காக அமைக்க உத்தேசித்துள்ள நான்கு ஆணைக் குழுக்களையும் பாராளுமன்றத்தில் முன்வைத்தால அதற்குஆதரவு வழங்கவும் தயாராக உள்ளோம் என்றும் தெரிவித்த அவர் தற்போதைய சூழ்நிலையில் தேசிய அரசினால் எதனையும சாதிக்கமுடியாது என்றும் தெரிவித்தார்: (வ

### ரவூப்ஹக்கீமை ...

ரவூப்ஹக்கீம் வெளியேற்றப்பட்டதிலிருந்து சிறுபான்மை மக்கள் தகுந்தபாடத்தைக் கற்கவேண்டும் தமிழ் முஸ்லிம் மக்கள் கடந்தகால கசப்பான அனுபவங்களை மறந்து ஒற்றுமையாகவே இருக்கவேண்டுமென்பதையே இருஇன மக்களுக்கும் இச்சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.

இருஇன மக்களும் ஒற்றுமைப்படாவிட்டால தமிழ் இனத்திற்கு விடிவே இல்லை என்றும் ஆயர் கிங்ஸ்லிசுவாம்பிள்ளை மேலும் தெரிவித்துள்ளார்; வ)

### தாயகத்துடன் ...

நேற்று தனது 25ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது.

இதனை முன்னிட்டேதலைவர் பிரபாகரன் தனது வாழ்த்துச்செய்தியைஅனுப்பி வைத்துள்ளார்,

அச் செய்தியில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

எந்தச் சக்தியிடமும் அடிபணிந்து போகாது உண்மையின் பக்கமும், நீதியின் பக்கமும் நின்று ஒரு அபாரமான துணிச்சலையும் தெம்பையும் எம்மக்களுக்கு தனது சேவையின் ஊடாக வெரித்தாஸ் வழங்குகிறது.

அரசியல், வர்த்தக அபிலாசைகளுக்கு அப்பால் நின்று நடுநிலை, நேர்மை, பக்கச்சார்பின்மை ஆகிய அபூர்வ பண்புகளை பிரித்து அடக்கி ஒடுக்கப்படும் மக்களுக்கான ஊடகத்துறையாக செயற்பட்டு வருவது பாராட்டத்தக்கது.

தேசப்பற்றும், இனப்பற்றும் உறுதத கடலகடந்து அன்னிய தேசங்களில் வாழும் எமது மக்களுக்கும் தினமும் சாவோடு போராடிவாழும் தமிழீழ மக்களுக்கும், எமது தேசததின் உண்மை நிலையையும் யதார்த்தசூழலையும் உடனுக்குடன் வெரித்தாஸ் வானொலி அறிவித்து வருகிறது.

போரினால் உறவுகளைப் பிரிந்து தொடர்புகளை இழநது தாயகத்துடன் வேரறுந்து சிதறுண்டுவாழும்எமது மக்களுக்கு ஒரு உறவுப்பாலமாக வெரித்தாஸ் வானொலி உள்ளது; [இ-8)

### தேனினும் ...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருவாசகத்தின் பெருமையை கூறவேண்டுமாயின் இறைவன் தனது கரத்தினாலேயே எழுதி ஒப்பமிட்டு வைத்தபெருமையையேகுறிப்பிட வேண்டும். 'அருளவாதவூரர் சொல்ல அமபலவர் தாமெழுதும் திருவாசகத்தை' என பின்னர் வியந்து பாடினார்கள் அடியார்கள. தமிழுக்குக் கிடைத்த ஞானச் செல்வங்களுளளே திருவாசகம் தலைசிறந்ததுஎனபதற்கு இதுவே சானறாகும். மாணிக்கவாசகரின் பொன்னடி போற்றி இந் நாளில் திருவாசகம் திருக்கோவையார் போன்றவறறால் அருளைப் பெருக்குவோம்.


**ராஜா**
யாழ்ப்பாணம்
லக்கிஸடார் அஜித்
(9 வேடங்களில)
வசுந்தராதாஸ்,
மீனா,நக்மா
மற்றும் பலர் நடித்த
STR பிலிம்ஸ்
**சிட்டிசன்**
தினசரி: 10-30, 2-00
5-00 [பு நே.]
(கி-2125)


# நம்பிக்கையில்லா பிரேரணை படுதோல்வி காணும்

## அமைச்சர் அலவி நம்பிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப்பிரேரணை ஒருபோதும் வெற்றியளிக்கப் போவதில்லையென்று. தொழில் அமைச்சர் அலவி மௌலானா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்;

நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக கருத்துத் தெரிவித்த மௌலானா மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை. பொதுஜனஐக்கிய முன்னணி அரசு தோற்கடித்து தொடர்ந்தும் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளும். ஏனெனில் ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர்கள்: நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாகவோ எதிராகவோ வாக்களிக்கப் போவதில்லை;

இந்நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு சில வாக்குகளால் நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்து வெற்றிபெறுவது உறுதியாகிவிட்டது.

இதேவேளை முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப்ஹக்கீமின் நடவடிக்கையினால் அக்கட்சி இன்று பிளவுபடும் அபாய நிலையிலும் முஸ்லிம் மக்கள் பாதிப்படையும் நிலையிலும் உள்ளதென்றும் அலவி மௌலானாமேலும் தெரிவித்துள்ளார். (இ)

# சிறுபான்மையினரின் எதிரிகள் அமைச்சர்களாக உள்ளனர்

## ரவூப்ஹக்கீம் தகவல்

[கொழும்பு]

பொதுஜன ஐக்கிய முன்னணியினதும் மற்றும்ஐக்கிய தேசியக்கட்சியினதும் நடவடிக்கைகளைப் பொறுத்தே நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவுவழங்குவதா இல்லையா என்பது பற்றி முடிவு செய்யப்படுமென்று முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்;

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பீர்களாவென்று ஹக்கீமிடம் கேட்கப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்:

அவர் மேலும்தெரிவிக்கையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அவர்கள் இன ஒற்றுமைக்கு குந்தகமாக செயற்பட்டதால் தான் என்னை அமைச்சரவையிலிருந்து நீக்கியதாக தெரிவித்திருப்பது எனக்கு மனவேதனையை அளித்துள்ளது.

சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராகச் செயற்படும் மஹிந்த யாபாலஹேரத் மற்றும் எஸ்.பி.திஸநாயக்கா போன்ற அமைச்சர்களை அமைச்சரவையில் வைத்திருக்கும் ஜனாதிபதி என்னை இன ஒற்றுமையின் எதிரிஎன்பதால் ஓரம்கட்டியதாக தெரிவித்திருப்பது வேடிக்கையாக உள்ளதென்று ஹக்கீம் மேலும்கூறினார். (இ)

### ஊர்காவல் படையில் ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்றுப் பிற்பகல், விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஊர்காவற்படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்;

இதனையடுத்து படையினர் இப்பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பு தேடுதலின் போது விடுதலைப்புலிகளின் உறுப்பினரொருவர் சயனைட்அருந்தி தற்கொலை செய்துள்ளாரென்று தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை நேற்று மட்டக்களப்பு ஜெயந்திபுரத்தில் பிஸ்ரல் குழுவினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி, பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தையடுத்து மட்டக்களப்பு துறைநீலாவணைப்பகுதி விசேட அதிரடிப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப் பட்டது; (இ)

### கல்விச்சேவை ஒளிபரப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில்தோற்றும்குடாநாட்டு மாணவர்களின் நன்மை கருதி நாளைமறுதினப் புதன்கிழமை இரவு 7.30 மணிமுதல் 8.30 மணிவரை, பலாலி ரூபவாகினி ஒளிபரப்பு சேவையில் கல்வி தொடர்பான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு செய்யப்படுமென யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது; (ந)

### மனித உரிமைகள் பற்றிய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் சமூகவிஞ்ஞான பிரிவினரின் தொடர்கருத்தரங்கு நாளைமறுதினம் பி. ப. 3 மணிக்குசமூகவிஞ்ஞான பிரிவின் தலைவர், பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் கத்தோலிக்க மறைமாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழுவின் தலைவர் வண. பிதா அல்போன்ஸ் இருதயநாதன் 'மனித உரிமைகளைப் புரிந்து கொள்ளல்' என்னும் பொருளில் கருத்துரை வழங்கவுள்ளார்;

இக்கருத்தரங்கில் கல்லூரி உயர்தரவகுப்பு மாணவர்கள் ஆசிரியர்கள், ஆர்வலர் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் நா. செல்வநாயகம் கேட்டுள்ளார், (வ

### மர்மப்பொருள் வெடித்ததில் இளைஞன்காயம

[யாழ்ப்பாணம்]

நிலத்தில் புதையுண்டு கிடந்த மர்மப்பொருள் வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்;

சம்பவத்தில் மட்டுவிலிருந்து இடம் பெயர்ந்து புத்தூரில வசிக்கும் இராசலிங்கம ரவிரங்கன்(வயது-22) என்ற இளைஞரே காலிலும் நெஞ்சிலும் பலத்த காயங்களுடன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

நேற்று மட்டுவிலில் உள்ள தனது வீட்டை பார்வையிடச் சென்ற போதே மேற் படி சம்பவம் இடம்பெற்றுள்ளது; [இ-104]

### மிதிவெடியில் காயம்

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி நீர்வேலிப்பகுதியில் நேற்று மிதிவெடியில் சிக்கிய குடும்பஸ்தர் ஒருவர், தனது இடது காலில பலத்த காயங்களுடன், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்;

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் இதே இடத்தைச்சேர்ந்த செல்லன் அரியகுட்டி (வயது 53) என்பவரே காயமடைந்தவராவார். 104

### தவிசாளர் ...

வும் அக்கட்சியின் நடவடிக்கைகள் பற்றி தனக்குஎதுவும் அறிவிக்கப்படுவதில்லை எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்;

இதேவேளை முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பதவியை நான் ஏற்றாலும் பின்னர் அந்தபதவியில்இருந்துஹக்கீம் என்னை விலத்தமாட்டார் என்பதற்கு என்னஉத்தரவாதம்உண்டு என்றுபேரியல் அஷ்ரப்கேள்வி எழுப்பியுள்ளார்; (ந-8)

### பொதுஜன ...

களிலுள்ள அமைச்சர்களையும, எம்.பிக்களையும் உடன் நாடு திரும்புமாறு ஜனாதிபதிவிடுத்தஅழைப்பை ஏற்று அமைச்சர்கள் அலவி மௌலானா, எஸ். பி. திஸநாயகக, மங்கள சமரவீரா ஆகியோர் நாடு திரும்பியுள்ளனர். (வ)


**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
விஜயகாந்,
மீனா
நடித்த
**சேதுபதி IPS**
தினசரி [ரீல்ஸ்]
11-00, 2-30[பு. நே]
(சனி, ஞாயிறு தினங்களில 6 மணிக்கு விசேட காட்சி காண்பிக்கப்படும)
(3264)


இப் பத்திரிகை "வலம்புரி" அன்கோ ஸ்தாபனத்தாரால் இல; 15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூன் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.